மன்று
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல:
065-22500

# சூழல் சுடர்

ஆசிரியர் குழு

திரு. காசுபதி நடராஜா
கலாநிதி ஜே. ஜயசிங்கம்
திரு. ச. பிரணவசோதி
மாஸ்டர் சண்முகம்
செல்வி. க. தங்கேஸ்வரி
திருமதி. நி. ஜெயராஜா
திரு. யோ. இ. கிறிஸ்ரோபர்
திருமதி. யோகா புவனேந்திரன்

1997 பங்குனி-சித்திரை சுடர்-51 விலை ரூபா 5/-

## மக்கள் வாழ்வும் சூழலும்

மக்களின் சொகுசான வாழ்க்கை முறை பல வழிகளில் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றன. நவீன உலகம் விரைவான நேர ஓட்டம், வேலைப்பழு இத்தனைக்கும் மத்தியில் எமது அன்றாட செயற்பாடுகளை கட்டாயம் செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை இதற்காகவே இன்று பல இயந்திரங்கள் மூலம் விரைவாக வேலைகளை செய்து முடிக்கின்றனர். ஆனால் இந்த இயந்திரப் பாவனை சூழலில் எவ்வகை தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது பற்றி நாம் சிந்திப்பதில்லை குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டி, சலவை இயந்திரம் போன்றவற்றில் இருந்து வெளியேறும் C.F.C. வாயு ஓசோன் படலத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் வாகனம், இயந்திரம் ஆகியவற்றில் இருந்து வெளியேற்றப்படும் காபனீரொட்சைட்டு வாயும் பூமியின் மேற்பகுதியில் கூரை போன்று அமைந்து பூமியை வெப்பமடையச் செய்கின்றன. இந்த வெப்பமானது பூமியில் பலவகை தாக்கத்தை ஏற்படுத்தி தாங்க முடியாத நோய்களைஉலகில் உருவாக்கி வருகின்றது இந்த வெப்பத்தின் தாக்கமே இன்று தோல்புற்று, கண்நோய்கள் கொடிய அம்மை, தலையிடி, என்பவற்றையும் இன்னும் பல உடல் உபாதைகளையும் ஏற்படுத்துகின்றது இந்நிலை தொடருமானால் பலவீனமான ஒரு சமுதாயமே உலகில் காணப்படும். இதை தடுப்பதற்கு மனிதர்களாகிய நாம் முயற்சித்தல் இன்றைய அவசியத்தேவையாகும். எமது சூழலில் தேவையான மரங்களை உருவாக்கி எமது சூழலை காக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.



உள்ளே.....

மெல்லச் சாகும் மானுடம் 02
மழை குறைவும் பிரச்சனைகளும் 03
சூழல் மாசடைவை கட்டுப்படுத்தல் 04
உங்களுக்குத் தெரியுமா 05
கிருமிநாசினி எப்படிப் பாவிப்பது 06
நெற்செய்கையும் பிரச்சனைகளும் 07
உணவும் நாமும் 08
மேல் கொத்மலை மின்வலுத்திட்டம் 09-10
செய்திச்சுடர் 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லச் சாகும் மானுடம்

பசுமைச்சித்தன்

பயிர்களைக் காப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பூச்சி கொல்லிகளினால் ஏற்படும் பாதகமான விளைவுகளை, 1972ல் ராசேல் கர்சன் 'மௌன வசந்தம்' என்ற புத்தகத்தின் மூலம் பலரும் அறியச் செய்தார். பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த நூல் சுற்றுச்சூழல் இயக்கங்களால் முக்கியமான நூலாகக் கருதப்படுகிறது. அதன் பின்னர் பல நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகள், பரிசோதனைகள் பூச்சி கொல்லிகளால் ஏற்படும் நன்மைகளை விட தீமைகளே அதிகம் என்பதை எடுத்துரைத்துள்ளன.

இதன் விளைவாகப் பல பூச்சிகொல்லிகளின் உற்பத்தியும் விநியோகமும் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன; சில முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளன. பூச்சி கொல்லிகளில் மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடிய 12 பூச்சி கொல்லிகளை உலகெங்கும் தடை செய்யக் கோரி கடந்த பத்தாண்டுகளாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் போராடி வருகின்றன. இதில் ஓரளவு வெற்றிதான் கிடைத்துள்ளது. அதிகாரபூர்வமாகத் தடை செய்யப்பட்ட பல பூச்சிகொல்லி மருந்துகள் சந்தையில் தாராளமாகக் கிடைக்கின்றன.

உள்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ள பூச்சி கொல்லிகளை ஏற்றுமதி செய்வதைப் பல நாடுகள் தடுக்கவில்லை இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படும் பூச்சி கொல்லிகளைப் பற்றிய முழு விபரங்களை இறக்குமதி செய்யும் நாடுகளுக்குக் கட்டாயம் வழங்க வேண்டும் என்ற விதிமுறை கூட இல்லை. ஏற்றுமதி செய்யும் நாடு விரும்பினால் இதனைத் தெரிவிக்கலாம். என்ற கட்டுப்படுத்தாத விதிமுறைகளைக் கூட பல நாடுகள் பின்பற்றுவதில்லை. இந்நிலையில் பூச்சி கொல்லிகள் ஏற்றுமதி, உற்பத்தி, விநியோகம் குறித்த சர்வதேச ஒப்பந்தம் ஒன்று தேவை என்பதைப் பல அமைப்புகள் வலியுறுத்துகின்றன,

சமீபத்தில் வெளியான சில ஆய்வறிக்கைகள் பூச்சி கொல்லிகளால் ஏற்படும் தீங்குகளைத் தெளிவாக்கியுள்ளன. பூச்சி கொல்லிகள் மனித உடலின் நோய் எதிர்ப்புத் திறனைப் பாதிக்கக்கூடும் என்ற கருத்தை மெய்ப்பிக்கும் பல சான்றுகள உள்ளன இது குறித்து திட்டவட்டமாகக் கூற முடியாது. என்றாலும் கூட போதுமான சான்றுகள் உள்ளதால் தடுப்பு நடவடிக்கைகள் தேவையாகின்றன என்று ராபர்ட் ரெட்பட்டோ, சஞ்சய் பாலிகா என்ற ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள், அவர்களின் ஆய்வு வளர்ச்சியுறும் நாடுகளில் உள்ள வறியவர்கள், குழந்தைகள் விவசாயத் தொழிலாளர்கள் பூச்சி கொல்லிகளால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவர் என்று சுட்டிக் காட்டுகிறது.

பூச்சி கொல்லிகளை எந்தவிதப் பாதுகாப்புக் கருவிகளும் இல்லாமல் கையாளும் விவசாயத் தொழிலாளர்கள் 477 (DDT) என்ற நஞ்சுப் பொருளின் எச்சம் உள்ள தாய்ப்பாலைக் குடிக்கும் குழந்தைகள் பூச்சி கொல்லிகளின் எச்சங்கள் உள்ள உணவுப் பொருட்களை உட்கொள்வோர் இவர்கள் அனைவரது உடல் நலமும் பூச்சி கொல்லிகளால் பாதிக்கப்படுகின்றன.

பூச்சி கொல்லிகள் | ஆபத்தான ரசாயனங்கள்· பாலூட்டிகளின் நோய் எதிர்ப்புச் திறனைக் குறைப்பதையும், அவற்றின் நோய் எதிர்ப்புச் செயல்பாடுகளில் மாறுதல்கள் ஏற்படுவதையும் இதன் விளைவாக அவை எளிதாக நோய் வாய்ப்படுவதையும் பல ஆய்வுகள் தெளிவாகக் காட்டியுள்ளன; பாலூட்டிகளின் நோய் எதிர்ப்புத் திறன் தன்மையும் மனிதர்களின் நோய் எதிர்ப்புத் திறன் தன்மையும் பெருமளவு ஒரே மாதிரியானவை. ஆனால் இன்று விற்கப்படும் பல பூச்சி கொல்லிகள் இத்தகைய விளைவுகளை ஏற்படுத்தக் கூடுமா என்பது குறித்துச் சோதிக்கப்படாதவை.

பூச்சி கொல்லிகளைக் கையாளும் விவசாயிகள் அதே வயதுடைய பிறரை விட நோய் எதிர்ப்புத் தன்மை குறைவால் ஏற்படும நோய்களால் அதிகமாகப் பாதிக்கப்படுவதை ஆய்வுகள் நிரூபிக்கின்றன,

விசாகப்பட்டினத்தில் பிடிக்கப்பட்ட மீன்கள் மத்திய தரைக்கடல் பகுதியில் மாண்ட டால்பின்கள் அமெரிக்காவில் பிடிக்கப்பட்ட டால்பின்கள் இவை அனைத்தும் பூச்சி கொல்லிகள், ஆபத்தான ரசாயனங்களால் பாதிக்கப்பட்டு நோய் எதிர்ப்புத் திறன் குன்றியுள்ளதை விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டுகிறார்கள். 1990களின் ஆரம்பத்தில் பல நூற்றுக்கணக்கான டால்பின்களின் மர்ம மரணத்திற்கு இதுதான் காரணம் என்று ஐயுறும் விஞ்ஞானிகள் அவைகளால் தாக்குப்பிடிக்கக் கூடிய வைரஸ்கள் இதற்கு காரணமல்ல என்றார்கள் ஆனால் நோய் எதிர்ப்புத் திறன் பாதிக்கப்பட்டதால், வைரஸ்களால் ஏற்பட்ட நோய்கள். இவை மாணமடையக் காரணமாக உள்ளன. என்றும் கருதுகிறார்கள்.

உடலின் நோய் எதிர்ப்புத் திறன் நம்மை நுண்ணுயிர்கள, வைரஸ்கள், பூஞ்சணங்கள் காரணமாக ஏற்படும் நோய்களிலிருந்து காக்க உதவுகிறது. உடலை வெளி எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும்

(தொடர்ச்சி 11 பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைகுறைவினால் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்

மேகலா வேலுப்பிள்ளை எல்லைவீதி, மட்டக்களப்பு.

இன்றைய நிலையில் எமது மாவட்டம் மட்டுமன்றி முழு இலங்கையுமே ''மழை குறைவினால்'' பல இன்னல்களுக்கு ஆளாகி இருப்பதை நாம் அறிவோம். அவற்றிலே இயற்கைக் காடுகள் பல பெரும் அழிவுக்குள்ளாகி இருப்பது குறிப்பிடத்தக்கது அத்தோடு விவசாய முயற்சிகள் பாதிப்படைந்துள்ளதும் அடிக்கடி மின்சாரம் தடைசெய்யப்படுவதும் நலம் தினமும் அவதானிக்கக் கூடியவை, இவைமுழு இலங்கையும் எதிர்நோக்கும் பிரச்சனைகளாக அமைந்தாலும் எமது மாவட்டத்தைப் பொறுத்தவரை மழை குறைவினால் மிகவும் மோசமான வரட்சி நிலையை தினமும் அனுபவிக்க வேண்டிய ஓர் துர்ப்பாக்கிய நிலையே இங்கு காணப்படுகின்றது.

இவ்வாறான அதிக வரட்சியானது எவ்வாறான தாக்கங்களைப் பூமிக்கும், மனிதனுக்கும் ஏற்படுத்தக் கூடியது என்பதைத் தற்போது நாம் கண்டு அனுபவித்துக் கொண்டிருக்கும் அதேவேளை இவ்வரட்சியானது இதைவிட மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்துமோ? எனும் அச்சத்துடனும் வாழ வேண்டிய நிர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுளோம். என்பது அன்றாட நிகழ்வுகள் வாயிலாக உணர்த்தப்படுகின்றது.

மழை குறைவினால் நாம் தற்போது எதிர்நோக்கும் பிரச்சனைகளில் குறிப்பிடத்தக்கவை. சில கீழே தரப்படுகின்றது.

1. ''ஊரோடி'' என அழைக்கப்படும் அம்மைநோய் வெகுவாகப் பரவி வருகின்றது
2. வெயில் வேளையில் வெளியில் செல்வதால் நீர்க் கடுப்புப்போன்ற வருத்தங்கள் ஏற்படுகின்றன.
3. விவசாயத்திலே பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதில் பெரும்செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. அவை வருமாறு

* அதிக வரட்சி காரணமாக பயிர்வளர்ச்சி குறைவடைவதோடு எதிர்பார்த்த இலாபத்தை அடைய முடியாதுள்ளது.
* பயிர்களில் பூக்கள் உதிர்வதோடு காய்க்கும் தன்மையும் குறைவடைந்துள்ளது.
* நீர்ப்பாசனத்திற்கு நீர் எடுப்பது கடும் சிரமம்
* பூச்சி பீடைத்தாக்கங்கள் அதிகரித்துக் காணப்படுவதோடு சேதன மருந்துகள் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்துவதோ ''கல்லிலே நாருரித்தல்'' போன்று சிரமமாகவேயுள்ளது.
* நிலத்தின் கீழே பயிர்களை நாசம் செய்யும் தணக்கன் போன்றவற்றின் பெருக்கம் அதிகரித்துள்ளதோடு அவற்றின் தாக்கமும் அதிகரித்துள்ளதனால் இவற்றின் கட்டுப்பாடும் கேள்விக்குறியாகி உள்ளது.

4 வேளாண்மைச் செய்கையில் எதிர்பாராத விதத்தில் நட்டம் ஏற்பட்டமையினால் நெல், அரிசி என்பவற்றின் விலை ஏற்றம்'

5. அதிகரித்துச் செல்லும் விலை வாசியும் வாழ்க்கைச் செலவும் மாணவமாணவிகளை கல்வியைத் தொடர முடியாத நிலைக்கு இட்டுச் சென்று உழைப்பை நாடச்செய்கின்றது;

6. வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக்கேற்ப பொருளாதாரத்தில் வளர்ச்சியின்மையால் ஏற்படும் சிக்கல்கள்.

7. எமது மாவட்டத்தின் இயற்கைக்காடுகள் அழிவுறுகின்றன.

இது போன்ற பல பிரச்சனைகளை ஏற்படுத்துவதனால் நாம் செய்வதறியாது திகைத்து நிற்கின்றோம்.

எனவே இந்த இக்கட்டான நிலையில் இருந்து எமது பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது எமது கடமை மாத்திரமன்றி காலத்தின் கட்டாயமுமாகும்.

இதற்கு முதற்படியாக எம்மவர் எல்லோரிடமும் சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்வின் அவசியம் உணரப்படுவதோடு வரட்சியை தாங்கி வளரக் கூடிய மரக்கன்றுகளை நாம் ஒவ்வொருவரும் நட்டுப் பராமரிக்க முன்வர வேண்டியதும் இன்றைய நிலையில் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

எனவே கொடிய நோய்களில் இருந்து எம்மை நாமே பாதுகாக்கவேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாகிவிட்டது. இனியும் எமது அசமந்தபோக்கு எவ்வித பயனையும் அளிக்கப்போவதில்லை. இன்றே கொடிய வரட்சி எம்மை விட்டு அகல நடவடிக்கை எடுப்போம். எமது பகுதியில் கூட்டாக மரங்கள் நடுவோம். நீர்பாச்சி வளர்த்து சூழலை பேணுவோம்.

இது எமது சூழல் - இதை
காப்பது எமது கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைதலும் அவற்றைக் கட்டுப்படுத்தலும்

நம்மை சுற்றியுள்ள சுற்றுப்புறத்தினையே சூழல் என்கின்றோம். இது பல்வேறு வழிகள் மூலம் மாசுறுவதைக் காணமுடிகிறது. இயற்கையின் கொடைகளான நிலம், நீர், ஆகாயம், காற்று இயற்கைத் தாவரங்கள் என்பனவே பாதிப்புறுகின்றன.

அன்றாடம் பெருகிவரும் சனத்தொகைப் பெருக்கத்திற்கேற்ப தேவைகளும் பன்மடங்காக அதிகரிப்பதன் காரணமாக பெரிய இயந்திரசாலைகள் கைத்தொழில் சாலைகள் தோற்றுவிக்கப்படும்போது இவ் இயந்திர சாலைகளிலிருந்து வெளியேறும் புகை, கழிவு என்பவற்றினால் சூழல் மிக விரைவிலே பாதிப்படைந்துவிடுகின்றன. தொழிற்சாலைகள் கக்கும் புகை நாம் சுவாசிக்கும் காற்றைப் பாதிப்பதனால் ரி.வி. ஆஸ்துமா போன்ற நோய்கள் ஏற்படும்.

இன்றைய நிலையில் மனிதன் இயந்திரமாக செயற்படவேண்டிய தேவையின் நிமித்தம் போக்குவரத்து இன்றியமையாத தொன்றாகவே காணப்படுவதனால் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை வளிமண்டலத்தை சென்றடைவதால் வளி மண்டலத்தில் காபனீரொட்சைடின் செறிவு கூடும்.

ஆக்கம்:-

V. ஞானச்செல்வம் — இதயச்செல்வம்

பெரும்பாலும் நகரப்பகுதிகளிலேயே தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதனால் கிராமப்புறமக்கள் பலர் நகரம் நோக்கிச் செல்வதனால் நகரப்பகுதியில் சனப்பெருக்கம் காரணமாக அங்கும் சூழல் மாசுறுகின்றது.

அரசு இச்சூழல் மாசடைவதை தடுக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுப்பதன மூலம் அதனை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடியும்

நாட்டின் பல பாகங்களிலும் தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம் மக்கள் ஓரிடத்திலே அதிகமாக குவிவதை தடுப்பதன் மூலம் மாசடைவதைத் தடுக்கலாம்

தொழிற் சாலைகள் வெளியேற்றும் கழிவுகள் நச்சுத்தன்மை வாய்ந்தனவாகவும் உயிரினங்கள் வாழும் சூழலில் மிகவும் அபாயத்தை உண்டு பண்ணுவனவாகவும் காணப்படுவதனால் அரசு இதனை கவனத்தில் கொண்டு தொழிற்சாலைகளை கண்காணிக்கும் நடவடிக்கையில் மிகவும் விழிப்பாக இருப்பதன் மூலமும் மாசடைவதைத்தடுக்கலாம்.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் குப்பை, கூழங்கள், நச்சுத்தன்மைவாய்ந்த வெற்றுப் போத்தல்கள், கழிவுப் பொருட்கள் போன்றன நீர்நிலைகளை வந்து சேர்வதனால் மாசுற்ற குடிநீரால் மக்கள் பல்வேறு தொற்று நோய்களுக்கும் உள்ளாகின்றனர். மேலும் நதி, ஏரி போன்றவற்றை கழிவு நீர் சென்றடைவதாலும் தைபோயிற்று வாந்திபேதி, போன்ற கொடிய நோய்களும் மஞ்சள் காமாலை, இளம்பிள்ளைவாதம் போன்ற நோய்களும் ஏற்படுகின்றன. இவை மனித மரணங்களுக்கும் வழியமைத்து விடுகின்றன.

மனித தொகைப் பெருக்கத்தால் மண் மாசடைகிறது. கழிவறைகள் இல்லாமையாலும் அல்லது அது பற்றிய அக்கறையாலும் இல்லாமையாலும் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் மக்கள் மலசலம் கழிப்பதனாலும் நோய்கள் உண்டாகின்றன; தொழிற்சாலைக் கழிவுகள் அகற்றப்படாமல் குவிந்து கிடப்பதனாலும் நிலம் மாசடைகின்றது, இதனால் குழந்தைகள் மண்ணில் விளையாடும் போது தொற்று நோய்கள் தொற்றுகின்றன.

இவை தவிர மின்னனுக்களாலும் சூழலுக்கு தீங்கே ஏற்படுகின்றது. இதனால் புற்றுநோய்மாத்திரமன்றி உடல் உறுப்புகளில் ஊனங்கள கூட ஏற்பட வாய்ப்பளிக்கின்றது

சூழல் இன்னும் பல்வேறு காரணிகளால் பாதிப்புறுகின்றன. விஞ்ஞான வளர்ச்சியும் தொழில் நுட்ப முன்னேற்றமும் சூழலை மேலும் நாசம் செய்கின்றன.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்குவோமாயின் சூழல் மாசடைதலில் மனித இனமே அதிகம் தொடர்புபடுவதைக் காண முடிகிறது. இதனால் மனிதன் தன்னுடைய சில பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்வதன் மூலமும், கல்வியறிவின் மூலமும், விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலமுமே சூழல் மாசுறுவதை தடுக்க முடியும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்ளுங்கள்

க. லோகநாதன்
சுவாமி விவேகாநந்தா சனசமூக நிலையம்,
மட்டிக்கழி, மட்டக்களப்பு.

1) முதன்முதலில் மகாத்மா என காந்தியை அழைத்தவர்?
கவியரசர் ரவீந்திரநாத் தாகூர்

2) தம் பெயர்களில் நிறங்களின் பெயர்களைக் கொண்ட நான்கு கடல்கள் எவை?
1. செங்கடல் 2. கருங்கடல்
3: வெண்கடல் 4. மஞ்சள்கடல்

3) முதன் முதலில் தபால் தலையை வெளியிட்ட நாடு எது?
கிரேட் பிரிட்டன்

4) ஆசிய விளையாட்டுக்கள் முதலில் எங்கு நடந்தது?
1951ல் டில்லியில்

5) சினிமா கொட்டகை இல்லாத நாடு எது?
சவூதி அரேபியா

6) ரோமானியர்கள் ஈக்களை எப்படி கருதுகிறார்கள்?
அதிஷ்டத்தின் சின்னமாக

7) ஐரோப்பாவில் ஓடும் மிகப் பெரியநதி எது?
ஒல்கா நதி

8) மனித உடலில் மிகப்பெரிய அவயவம் எது?
கால்

9) அமெரிக்காவின் தேசிய பறவை எது?
சொட்டை கருடப்பறவை

---

## சுற்றாடல் பாதுகாப்பின் அவசியம்

ஆக்கம்:-
வேலாயுதபிள்ளை நவீரதன்
ஆண்டு:- 13 (கலை) மட்/தேற்றாத்தீவு ம. வி
தேற்றாத்தீவு

மனித குலம் இயற்கையிலே தங்கியுண்டு அதை
மாய்த்துவிட்டால் தினமும் எமக்கு குறையுமுண்டு
மழையென்றும் நிழல் என்றும் தருவதுண்டு
மதிப்புடனே பாதுகாக்க குதிப்போமாக

போக்குவரத்து என்னுமொரு சேவையுண்டு - அதற்கு
புகை புகையாய் கக்கிவிட சக்தியுண்டு
தெளிவாக நகரங்களில் இவையெல்லாம் - நித்தம்
வளிமண்டலத்தை கெடுக்கிறது! ஐயோ ஐயோ

தொழிற்சாலை என்று கூறும் நிறுவனத்தால்
அழித்தொழிக்கும் உயிரினங்கள் ஆயிரமாம்
சிரிக்காதே மானிடா இதைப்பார்த்து - நித்தம்
சிந்தித்து நடந்துவிடு கவனமாக

அடர்ந்து படர்ந்த காடுகளின் நடுவினிலே
ஆயிரம் ஆயிரம் மர அரிவு சாலைகளாம்
ஆராய சென்ற வனபரிபாலகர்கள் - அங்கு
ஆதயம் வேண்டுகின்றனராம் - போய்ச்சி போய்ச்சி

நாட்டின் வீட்டின் வளர்ச்சிக்கு - என்றும்
நாடி உதவும் செல்வமது சூழலப்பா - எனவே
சூழலையும் அதன் கூறினையும் - தினம்
சுகமாக காப்பது அவசியம் தான்

---

## கண்டு பிடியுங்கள்

பரிசு உங்களுக்கே

போட்டி இல: 28

1) வெட்டி வேர் எதற்குப் பயன்படும்?
2) சேனைப் பயிர்ச்செய்கையால் ஏற்படும் தீமைகள் எவை?
3) உணவு காப்பீடு என்றால் என்ன?
4) அமில மழை பூமியில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன?
5) தொழில் நுட்ப வளர்ச்சி சூழலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் சில தருக?
6) உயிரினங்களின் வாழ்க்கை தொகுதிக்கு ஆதாரமாக கருதுவது எது?
7) நைதரசன் தாவரத்தின் எப்பகுதி வளர உதவும்
8) வல்லாரை ஒற்றையிலை தாவரமா?
9) வல்லாரையை தொடர்ந்து பாவிப்பதால் ஏற்படும் நோய்கள் எவை?
10) அரிசியில் காணப்படும் புரதத்தின் அளவு?

---

போட்டி இல - 27
பரிசு பெற்றோர் விபரம்

1) சி. மாதவன், கணேசா மகா வித்தியாலயம், ஆண்டு 8, சேனைகுடியிருப்பு, கல்முனை.

2) எம். சிவபாதசுந்தரம், பிரதேச மலேரியா அலுவலகம், மட்டக்களப்பு.

இவர்களுக்குரிய பரிசு மணியோடர் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருமிநாசினி சிலதற்காப்பு முறைகள்

எஸ் கோபாலரெத்தினம் (விபுலானந்தா சூழல் மன்றம் தேத்தாத்தீவு - 01)

1 மருந்து தெளிக்கும் கருவியில் எவ்வகையான துவாரங்களும் இருக்கக்கூடாது

2) ஒரு நாளைக்கு ஒருவர் ஒருதரமோ அல்லது இரண்டுதரமோ எனக்குறிப்பிட்ட அளவே தெளிக்க வேண்டும்

3) தெளிப்பவர்களுக்கு எந்த விதக்காயங்களும் இருக்கக் கூடாது

4) பாதுகாப்பான தெளிகருவியை பாதுகாப்பு உறைகளை உடம்பின் மீது அணிந்து கொண்டு வாயையும் மூக்குத் துவாரங்களையும் பாதுகாப்பு மூடிகள் போட்டு மூடிக்கட்டிக் கொள்ள வேண்டும்

5) கிருமிநாசினியை ஒரு போதும் காற்று வீசும் திசைக்கு எதிரான திசையில் நின்று தொளிக்கக் கூடாது காரணம் இலகுவில் கிருமிநாசினி சுவாசப்பையினுள் சென்றுவிடும்

6) கிருமிநாசினியைத் தெளித்து முடிந்து உடைகளையும் உரிய கருவிகளையும் சவர்க்காரம் போட்டு கழுவிச்சுத்தம் செய்யும் வரை வெற்றிலை போடுதல் பானம் அருந்துதல் உணவு அருந்துதல் போன்ற எவற்றையும் எக்காரணம் கொண்டும் செய்யக் கூடாது

7) கிருமிநாசினி தெளித்து மூன்று அல்லது நான்கு நாட்கள் செல்லாத மரக்கறி கீரை வகைகளை உடன் பிடுங்கி சமைக்கக் கூடாது

8) கிருமிநாசினி பற்றி முன் அறிவோ அனுபவமோ இல்லாத எவரும் இவற்றினைத் தெளிக்கும் வேலைக்குப் போகக்கூடாது குறிப்பாக சிறுவர்கள் இவ்வேலைக்குப் பயன்படுத்தக் கூடாது.

# மட்டக்களப்பில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட புதினாக் கீரை

(தவமணி சந்தானம் விவசாய போதனாசிரியை)

விவசாயத்திணைக்களத்தைச் சேர்ந்த விவசாய உத்தியோகத்தர் திரு. வி. இராசநாயகம் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட புதினாக்கீரை தற்போது இம் மாவட்டத்தின் பல பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதுவரை காலமும் இதன் முக்கியத்துவம் உணரப்படாததால் இங்குள்ள அநேகர் இதனைப்பற்றி அறியவில்லை,

இது செடியினத்தைச் சேர்ந்தது. இதில் மூன்று வகையுண்டு புதினா, பொதினா, ஈயெச்சங்கீரை என்பனவாகும். இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு வாசனை உடையவை. இதனை ஒடுதலாம்பரசி, புதியன, மூலிகை என்ற பெயர்களிலும் அழைப்பர்.

ஆசியா, ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த அநேக மக்கள் இதனை விரும்பி உணவில் சேர்ப்பர். மாமிச வகையோடு சேரும் போது விரும்பத்தக்க மணத்தைக் கொடுக்கிறது.

இக்கீரையின் இலை, தண்டு,வேர், விதை யாவும் மூலிகையாக இருப்பதால் மருந்தாகப் பயன்படுத்துகின்றார்கள். இது காரமும் மணமும் நிறைந்த ஊட்டச்சத்துள்ள மூலிகை உயிர்ச்சத்துக்கள் இரும்புச் சத்து, கல்சியம், பொசுபரசு, புரதம், கந்தகம், கனிப்புக்கள், ஒட்சாலக்கமிலம், குளோரிக், போன்ற சத்துக்களை உள்ளடக்கியது. விற்றமின் சி, தயமீன், ரைபோபிளேவின், நிகோடினிக்கமிலம், கொழுப்பு நார்ச்சத்துக்கள் போன்றனவும் காணப்படுகிறது.

இக்கீரை இரத்த உற்பத்திக்கும் இரத்த சுத்திக்கும் மிகவும் சிறந்தது. உடலின் உஷ்ணத்தை உண்டு பண்ணும். இரைப்பைக்கு வலுவைக் கொடுக்கும். வாய்வுகளைப் போக்கும் குளிரால் ஏற்படும் கை, கால், இழுப்பு, வயிற்றுவலி, நரம்புத்தளர்ச்சி சிறுநீரகக் கோளாறுகள், ஈரல்நோய்கள், மூட்டுவலி பித்தம், ஆஸ்த்மா, மாதவிடாய்க் கோளாறுகள், வாந்தி பேதி, அஜீரணம், மந்தம், வாய்நாற்றம், குழந்தை நோய்கள். சுரப்பாசய நோய்கள், பசியின்மை, கை கால் எரிச்சல், குமட்டல், பல் கூச்சம், காமாலை காய்ச்சல் மற்றும் குளிர்,உஷ்ண சுரங்களையும் விஷங்களையும் போக்கும் சக்தியுள்ளது.

இதனுடைய இலையை நீரில் ஊற வைத்து அந்நீரை அஜீரணம், சுரம், உள்ளவர்கள் குடித்து வரலாம். இலையை நீரில் கொதிக்கவைத்து தேனீருடனும் அருந்தலாம்.

இக்கீரையோடு இஞ்சி, மிளகு, சீரகம் சேர்த்துக் காய்ச்சி அருந்தினால் வாந்தி, குமட்டல் நிற்கும், புதினாக்கீரையுடன் உப்பு சேர்த்து சூடு பறக்க ஒத்தடம் கொடுத்தால் கை, கால், எரிச்சல் தீரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற் செய்கையில் தோன்றும் பிரச்சனைகளும் அவற்றுக்கான கட்டுப்பாடும்

ந. கோணேசராஜா (விவசாய ஆசிரியர்)
மட்/களுவங்கேணி விபுலானந்தா வித்தியாலயம்

எப்போதும் ஒரு நோய்பரவுவதற்கு சாதகமான தாவரம் ஒன்று இருத்தல் வேண்டும் அடுத்தாக நோய்க்காரணி தொடர்புபட வேண்டும் சூழல் சாதகமாக இருக்க வேண்டும் இந்த மூன்றும் பங்களிப்பு செய்யும்போது நோய்பரவுகின்றது இவற்றில் ஏதாவது ஒன்று சாதகமற்றதாக இருக்கும்பட்சத்தில் நோய்பரவுவதை தடுக்கலாம்

சில பீடைத்தாக்கத்தின் அறிகுறிகளை நோய்த் தாக்கம் எனவும் மூலகங்களின் பற்றாக்குறையையும் நோய் எனவும் கருதும் சந்தர்பம் அதிகமாய்உண்டு, எனவே நெற்செய்கையில் நோய்களை சரியாக அடையாளம் காணல் இன்றியமையாதது

நெற்தாவரத்தின் வளர்ச்சி அவத்தை இனப் பெருக்க அவத்தை முதிர்ச்சி அவத்தை ஆகியகாலம் களிலேயே பெரும்பாலும் நோய்கள் தாககுகின்றன இவற்றை பங்கசுநோய்கள், பக்றீரியாநோய்கள், வைரசுநோய்கள் என மூன்று பிரிவாக பிரிக்கலாம் இவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வோம்

✱ பங்கசு நோய்கள் (Fungal Diseases)

அ) எரிவந்தம் (Blast)

நோய்காரணி:- (பைறிகியுலேரியா ஒரைசே) (Pyricuaria Oryzae)

1) நெற்தாவரத்தின் எக்காலத்திலும் இதுஏற்படும்

2) இலை, கணுக்கள், நெற்கதிர், மணியில் பல் வேறு இடம்களில் பாதிப்பைக்காணலாம்.

3) உயர் நாற்றுமேடையில் இன்நோய் அதிகமா காணப்படும்

நோய் அறிகுறிகள்:-

1) பாதிக்கப்பட்ட இடத்தில் தரைநிறமான புள்ளிகள் தோன்றும்

2) நூண்ணிய கோடுபோன்று ஆரம்பத்தில் இருந்து பின்படிப்படியாக பெரிதாகி கண்போன்று தோற்றமளிக்கும்

3) கதிர்கள் பங்கசினால் பாதிக்கப்படும் போது பாதிக்கப்பட்ட இடம் கருநிறமாகி முறிந்து விழும் இதுகழுத்தழுகல் எனப்படும்.

4) அக்கதிரில் தோன்றும் மணி நிரம்பாது சப்பியாக காணப்படும்

சாதகமான சூழல்

கூடிய சாரீரப்பதன், குளிரான காலநிலை, அடிக்கடி மழை இலையில் பனித்துளி காணப்படல் போன்ற காரணிகளினால் நோய் பரவ ஏதுவாகும். அத்துடன் அடர்த்தியான பயிர் கூடிய நைதரசன் பசளை பிரயோகித்தல் ஆகியவற்றால் நோய் இலகுவாக பரவும்.

நோய் பரவுதல்

காற்று, நீர் நோயால் பாதிக்கப்பட்ட தாவர மிகுதி ஆகியவற்றினால் பரவும்.

கட்டுப்பாடு

1) எதிர்த்து வளரக்கூடிய நெல் இனங்களை பயிரிடுதல்.

2) நோய் காணப்படும் இடத்தில் தாழ் நாற்று மேடையை அமைத்தல்

3) அதிகளவு நைதரசன் பசளை இடுவதையும் அதிகளவு அடர்த்தியாக விதைப்பதையும் தவிர்த்தல்.

மடல் வெளிறல்

நோய்க்காரணி (ரைகொக்ரோனியா சொலனை)

1) அனேகமாக இந்நோய் அதிகளவு மட்டம் பொர்ந்த பின்னரே ஏற்படும்.

2) தண்டை மூடிஉள்ள இலை மடலிலேயே நோய் பெருமளவு ஏற்படும்.

நோய் அறிகுறிகள்:-

1) இலைமடலில் முட்டை வடிவ அல்லது நீள்வட்டமான பச்சை கலந்த நரைநிறமான புள்ளிகள் தோன்றும்.

2) இப்புள்ளிகள் பெரிதாகி இணைந்து இலைமடல் நரை நிறமாக மாறும்

சாதகமான சூழல்:-

அதிக வெப்பமும் ஈரப்பதனும் கொண்ட கால நிலை நோய் பரவ ஏதுவாக அமையும் அத்துடன் அதிக அடர்த்தியாக பயிர் காணப்படல் அதிக நைதரசன் பசளைப்பாவனை அதிக களைகாணப்படல்.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை உணவுகளின் நன்மைகள்

தொகுப்பு: க. கனகராசா

தேங்காய், வாழை, மா, பலா, கொய்யா, அரஞ்சு, அப்பிள், சீத்தா, பப்பாளி, முதலான பழங்கள் யாவும் இயற்கை உணவுகளே.

01. உயிராற்றலை வளர்த்துக்கொள்ளும்.
02. எளிதில் செரிமானமாகும்.
03. மலம், சிறுநீர், வியர்வை, உண்டஉணவுடன் நறுமணம் விளங்கும்.
04. உடல், உளநோய்கள் அனைத்தையும் நீக்கும்.
05. என்றும் இளமையோடு வாழ வழி வகுக்கும்.
06. உடலை அளவோடு வைக்கும்.
07. அன்புபெருக அளவோடு மக்கள் அமைவர்.
08 மனிதப்பரம்பரையை வளப்படுத்தும்.
09 அனைவருக்கும் விடுதலை அளிக்கும்.
10. ஆக்கச்சிந்தனைகள்மிகும், மகிழ்வும் அமைதியும் மிகும்.
11 எல்லா நற்பண்புகளும் தரும்
12. சோலைகள் பெருகும்.
13. மழைவளம் நிறையும்.
14. நச்சுக்காற்று குறைந்து உயிர்க்காற்றுமிகும்.
15. எங்கும் சோலைமலர்களின் நறுமணம் பரவும்.
16. தேவைகள் குறையும். 17 எளிமையானது.
18. அறச்சாலைகள், தவப்பள்ளிகள், ஆசிரமங்கள்? ஆன்றோர் அறைகள் உடலை உயிரை அழியாது காக்க ஆய்வகங்கள், மேம்பட்ட மனிதரை உருவாக்கும் முயற்சிகள் மிகும்.
19. கனிகளே நம்மை வாழவைக்கும் உணவுகள்.

## சுகவாழ்வு

நோயணுகா விதிகளை அனுட்டித்து உடம்பைப் பாதுகாத்தல் சித்தமார்க்கம். அது ஆயுர்வேதமுமாகும். உடம்பால் அழிகுவர், உயிரால் அழிகுவர். திடம்பெறு மெய்ஞ்ஞானம் தேடவும் மாட்டார். உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேனே என்பது திருமந்திரம். நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம். உள்ளமும் உடம்பும் நோயுற்றிருப்பவனுக்கு இந்த உடம்பு ஒரு வரப்பிரசாதம். இந்தச் சரீரம் முத்திபெறுவதற்கு மூலம் திடமான உடம்பிலே திடமான மனம் என்பது ஆங்கிலப் பழமொழி "A Sound Mind in a Sound Body" சௌக்கியமின்றேல் சாந்தம் இல்லை. ஆத்மீக முன்னேற்றத்துக்கும் சௌக்கியம் அவசியம். வளமான நிலத்திலே தான் பயிர்கள் பயன்தரும். தேகசௌக்கியம் இளமைக்காலத்தே பேணப்படுதல் மிகவும் அவசியம். ஆற்றலழிந்தவர் நொந்து சாவர். ஆத்மீக நெறியை அவசரமாக அந்திய காலத்தில் அறிய முடியாது. நிதானம், பொறுமை, பயபக்தி, மனச்சாந்தி, தேகசுகம், என்பனவுள்ளவரே ஞானம்பெறற்குரியவர். அகத்தைச் செம்மைப்படுத்த புறமும், சுத்தமாய்ச் சுகமாய் அமையவேண்டும்.

சுகவாழ்வு அவசியம். மூளையும் முயற்சியும் அமைவதற்கு சுகவாழ்வு அவசியம். மருந்தென ஒன்று வேண்டாத வாழ்வு சுகவாழ்வு. தேகசுகம் கெட்டவருக்கு பசியுண்டாக உண்ட உணவு செமிபாடாக உறக்கம்வர, உறக்கம் கலைய எல்லாவற்றிற்கும் மருந்து தேவை. மருந்து அதிகப்பட உடம்பு தன்னியல்பழிந்து கெட்டுப்போகிறது. சுகவாழ்வு தவவாழ்வு

# சமையல் உணவுகளின் தீமைகள்

சோறு, இட்லி, தோசை, சப்பாத்தி வடை முதலாக சமைத்து சுட்டு, பொரித்து, வறுத்து காய்ச்சிப்பெறுவன யாவுமே சமையல் உணவுகளே.

01. உயிராற்றலைக் குறைத்துக்கொள்ளும்
02. சரியாகச் செரிக்கமாட்டா
03. மலம், சிறுநீர், வியர்வை மிகவும் துர்நாற்றம் தரும்
04. உடல் உளநோய் அனைத்தையும் உண்டாக்கும்
05. நரை, திரை மூப்பு இறப்பு இவற்றிற்கு வழி வகுக்கும்
06. உடலைப்பெருக்க வைக்கும்
07. காமத்தை தூண்டி மக்கள் பெருக்கத்தை உண்டாக்கும்
08. மனிதப்பரம்பரையையே சிதைத்து அழித்து விடும்
09. பெண்கள் சமையலின் அடிமைப்படுத்தப்படுவர்
10. அழிவுச் சிந்தனைகள் மிகும்
11. போர் பூசல்கள் வழக்குகள் மிகும்
12. காடுகள் அழியும் மழைவளம் குறையும்
13. உயிர்காற்றுக்குறைந்து நச்சுக்காற்றுமிகும்
14. நச்சுப்புகைகளும், சாக்கடைகளும் மிகும்
15. தேவைகள் பெருகும், செலவு மிக்கது
16. இறைச்சிக்கடைகள், மீன் சந்தைகள், மதுக்கடைகள், காவல் நிலையங்கள் சிறைக்கூடங்கள், நீதிமன்றங்கள், இராணுவத் தளங்கள், ஆயுதக்கிடங்குகள், மருத்துவ மனைகள், உணவு விடுதிகள் மிகும்.
17. சமையல் உணவுகள் சிதைத்துக்கொல்லும் நஞ்சுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் கொத்மலை நீர்மின்வலுத் திட்டமும் சுற்றாடலும்

நன்றி:- மக்கள் உரிமைகள்

''சுற்றாடல் பாதுகாப்பு'' என்பது மிகவும் முக்கியமானது, மாசுபடுத்தப்பட்ட சூழல் உயிரினங்கள் வாழ்வதற்குப் பொருத்தமானதல்ல; சூழலைப் பாதுகாக்க பல நாடுகள் சட்டங்கள் இயற்றியுள்ளன. தாவரங்களும், மனிதனுட்பட விலங்கினங்களும் சேர்ந்து இயற்கைச் சூழலை உருவாக்குகின்றன. பூமியில் உயிரினங்கள் உயிர்வாழ ஒரு சமப்படுத்தப்பட்ட இயற்கைச் சூழல் அவசியம்.

இலங்கையில் மண் பாதுகாப்பு, தாவிர, விலங்கின பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள், 1960ம் ஆண்டுக் காலப்பகுதிகளில் இருந்தபோதும், 1980ம் ஆண்டு 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் உருவாக்கப்படும் வரை சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் அமுலில் இருக்கவில்லை. இச்சட்டத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சுற்றாடலைப் பாதுகாக்கவும், முகாமைத்துவம் செய்யவும் பரந்த அதிகாரங்களை வழங்குகின்ற ஏற்பாடுகள் உண்டு. இச்சட்டம் 1988ம் ஆண்டு 96 இலக்க திருத்தச் சட்டத்தால் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட சட்டத்தின் பாகம் IV(இ) திட்டத்தை அனுமதித்தல் தொடர்பானதாகும். இவ்வேற்பாட்டின்படி ''திட்ட அனுமதிக்கும் முகவர்'' திட்டம் முன்மொழிபவரிடமிருந்து சுற்றாடல் பரிசீலனை அறிக்கை அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீடு கோரவேண்டும். இவ்வறிக்கை முன்மொழியப்படும் திட்டம் தொடர்பானதாக இருக்க வேண்டும். முன்மொழியப் படும் திட்டம் தொடர்பான ஏற்பாடுகள் 24-06-93 இல் வெளிவந்த 772/22ம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகள் கிடைத்தபின் திட்டத்தை அனுமதிக்கும் முகவர் திட்டத்தை வெளிப்படுத்த முன் பொதுமக்கள் பார்வைக்கு விடவேண்டும்.

1994ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இலங்கை மின்சாரசபை, மின்சக்தி எரிபொருள் அமைச்சிற்கு மேல் கொத்மலை பிரதேசத்தில் வலு உற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற்காக விண்ணப்பித்திருந்தது. இந்தத் திட்டம் மேல் கொத்மலை நீர்வலுத் திட்டம் (UKHP) என்று பெயரிடப்பட்டிருந்தது. இத்திட்டம் சூழலியல் காரணங்களால் ஏற்கப்படவில்லை ஆனால் இத்திட்டத்தைத் தயாரிக்க இலங்கை மின்சார சபை கணிசமான அளவு தொகையை செலவிட்டிருந்தது. பின்னர் இலங்கை மின்சார சபை சுற்றாடல் போக்குவரத்து, பெண்கள் விவகார அமைச்சிற்கு மேன்முறையீடு செய்திருந்தது. இம்மேன் முறையீடும் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களைப் பரிசீலிக்காமல் ஒன்பது பேர்கொண்ட சிறப்புத் தேர்ச்சி பெற்ற குழுவால் நிராகரிக்கப்பட்டது எனினும் ஒன்பது பேர் கொண்ட குழு ''யோர்க் போட்'' பதிலீடு குறைந்த செலவிலும் குறைந்த சூழல் சுற்றாடல் தாக்கங்களையும் ஏற்படுத்துவதால் கொத்மலைத் திட்டத்தை விட சிறந்தது என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது பின்னர் இலங்கை மின்சாரசபை ஜனாதிபதியின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்தது. ''யோர்க் போட்'' தெரிவைப் பரிசீலனை செய்ய சிறிது காலம் வழங்கப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் அறிக்கைகளை பரிசீலனை செய்த மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தொழில்நுட்பக் குழுவான மத்திய பொறியியளாளர் ஆலோசனைப் பணியகம் ''யோர்க் போர்ட்'' திட்டம் மாற்றுத்திட்டம் மட்டுமல்லாது இத்திட்டம் எதிர்மாறான சுற்றாடல் விளைவுகளை குறைப்பதோடு 180 M.W. வலு உற்பத்தி செய்யும் தகைமையும் வாய்ந்தது. ஆரம்ப திட்டமான மேல் கொத்மலைத் திட்டத்தில் 150 M.W. வலுவே உற்பத்தி செய்ய முடியும். எனவே ''யோர்க் போர்ட்'' தெரிவு லாபம் தரக்கூடியது என்று குறிப்பிட்டது.

மேல் கொத்மலை நீர்வலுத் திட்டத்தின்படி வலு உற்பத்தி நிலையம் தலவாக்கலை பிரதேசத்திலேயே தாபிக்கப்படும். திட்டத்திற்குத் தேவையான நீர் கொத்மலை ஓயா, பூண்டலு ஓயா, பூனா ஓயா ஆறுகளில் இருந்து குழாய் மூலம் தலவாக்கலைப் பகுதிக்குக் கொண்டு வரப்படும். சென்கிளாயர் (பெரியது) (85M) சென் கிளாயர் (சிறியது 50M) டிவோன் (97M) ஆகிய மூன்று முக்கிய நீர்வீழ்ச்சிகளில் இருந்து நீர் பெறப்படுவதனால் இந்நீர் வீழ்ச்சிகள் வற்றுவதனால் இந்நீர் வீழ்ச்சிகள் வற்றுவதுடன் பூண்டல் (100M), பூனா, றம்பொட (109M) சென் அன்ட்றூஸ் வீழ்ச்சிகளின் 50% நீர் குறைக்கப்படுகிறது.

முன்மொழியப்பட்ட திட்டத்தின்படி 21 Km நீளமான சுரங்கம் தண்ணீரைக் கொண்டு வருவதற்காக மலைகளினூடு அமைக்க வேண்டி இருப்பதால் பல சூழலியல் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கக் கூடும்.

புவியியல் வரைபடத்தின் படியும் முன்மொழியப்பட்ட திட்டத்தின் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையின் படியும் தலவாக்கலை நீர்த்தேக்க வலு உற்பத்தி நிலைய புவியியல் அறிக்கைகளின் படியும். பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் திணைக்கள பேராசிரியர் விதானகேயின் அறிக்கையின் படியும் சுரங்கமும், நிலக்கீழ்வலு நிலையமும், கட்டுப்பாட்டு அறையும் அமைக்க உத்தேசிக்கப்பட்ட இடமானது நிலச்சரிவு ஏற்படக் கூடும் என்று சந்தேகப்படும் இடமாகும். கடந்த சில ஆண்டுகளிற்கு முன் மகாவலி அதிகார சபை, 'நியங்கம் தொற' கிராமவாசிகளை இப்பிரதேசம் அபாயமானதெனக் கருதி வேறு இடங்களில் குடியேற்றியது.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# மேல்....

(9ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், முன்மொழியப்பட்ட திட்டத்தின் சில பகுதிகள் அபாய வலயத்தில் அடங்கும் என்பதுடன் 50% ஆன முதல் அதனால் ஏற்படும் விளைவுகளைக் குறைக்கவே பயன்படும். அறிக்கையில் சேர்க்கப்பட்ட புவியியல் வரைபடத்தில் கொத்மலை ஓயாவின் வலதுபுறகரை 'நியங்கம் தொற'. 'பொத்துமுகொட' ஆகிய கிராமங்களினூடு பாய்கின்றது. இப்பகுதியிலும் அடிக்கடி நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன. சூழலியலாளர்களின் கருத்துப்படி இத்திட்டத்தில் கட்டடங்கள் அமைக்க உத்தேசிக்கப்படும் இடம் அதிர்வு கூடிய இடமாகும்.

உத்தேசிக்கப்பட்ட திட்டத்தினால் ரயில் பாதை ரயில் பாலம், தங்கு விடுதி உட்பட 50% ஆன தலவாக்கலை நகரம் நீரில் மூழ்கும் சாத்தியமுண்டு. இதனால் இப்பகுதியில் வாழும் 432 குடும்பங்களை வேறு இடத்தில் மீளமர்த்த வேண்டிய நிலை ஏற்படும். மீளக் குடியேற்ற வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். ஏனெனில் 150 M வலயம், பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதி கணக்கில் எடுக்கப்படவில்லை இதனால் ஏறத்தாழ 600 குடும்பங்களை மீளமர்த்த வேண்டிய நிலை உருவாகலாம். இது தொடர்பாக திட்ட அறிக்கையில் குறிப்பிடப் படவில்லை மேலும் உத்தேசிக்கப்பட்ட திட்டத்தில் வெள்ள அபாயத்திற்கு பாதுகாப்பு குறிப்பிடப்படவில்லை.

கொத்மலைத்திட்டத்தினாலான சுற்றாடல் தாக்கம்

1) முதலில் தயாரிக்கப்பட்ட திட்டத்தின்படி திட்டத்திற்குத் தேவையான நிலப்பரப்பில் மண் அரிப்பு சதுரகிலோ மீற்றருக்கு 333 கன மீற்றர் (333மீ) ஆகும் அனுமதிக்கப்பட்ட மண் அரிப்பு ஒரு ஹெக்ரேயருக்கு 25 தொன்களாகும் எனவே 33.3 தொன் ஒவ்வொரு வருடமும் களஞ்சியப் பகுதியின் 100 000 ச.மீற்றர் பரப்பில் தேங்கும் இது மொத்த களஞ்சியப் பகுதியின் 15% ஆகும் 5 வருட காலப்பகுதிக்கு அகற்றப்படாவிட்டால் இது மொத்த கொத்மலைக் களஞ்சியப் பகுதியின் 75% ஆகும், இது தெளிவாக்குவது இதற்குப் பெருந் தொகையான பணம் செலவிட வேண்டி இருக்கும் என்பதேயாகும்

2) களஞ்சியப்பகுதிக்கு கீழுள்ள 30கி.மீ ஆற்றுப்பரப்பு இத்திட்டத்தால் வற்ற நேரிடும் இது இந்நீரைப் பயிர்ச் செய்கைக்கும் மிருகவளர்ப்புக்கும் பயன்படுத்தத் தங்கியிருப்பவர்களுக்கு பாரிய தாக்கத்தை உண்டு பண்ணும். மகாவலிப் பகுதியைப் போல் எஞ்சிவிடப்படும் சிறு சிறுநீர்க்குளங்கள் நுளம்பு பெருகுவதற்கு வழிவகுக்கும்

3) மேலும் இவ்வழகிய நீர்வீழ்ச்சிகளை பார்வையிடவருபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தால் அதை நம்பி வாழ்பவர்களின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடையலாம்

இலங்கை மின்சாரசபை கொத்மலைத் திட்டத்தினால் சென்கிளாயர்ஸ் நீர்வீழ்ச்சி முற்றாக தடுக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருக்கிறது. எனினும் பேராசிரியர் விதானகே நீர் வீழ்ச்சி வற்றுவது முக்கியமான பிரச்சனையல்ல. இப்பகுதியில் ஏற்படும் நிலச்சரிவே முக்கிய அபாயமெனத் தெரிவித்துள்ளார், மேலும் பேராசிரியர் அமைக்க உத்தேசிக்கப்படும் சுரங்கம் எவ்வகையில் அமைக்கப்படும் என்று கவனம் செலுத்துவது முக்கியமானது என்று தெரிவித்துள்ளார். மேலும் கொத்மலைப் பகுதியில் வெடி வைத்து உடைக்கும் உபாயம் கையாளப்படுமானால் மேலும் 4 மைல் நிலப்பகுதி கொத்மலைப் பகுதிக்குள் தள்ளப்படும் இது பற்றி இலங்கை மின்சாரசபை மௌனமாக உள்ளது-

''யோர்க்போர்ட்'' தெரிவு

''யோர்ச்போர்ட்'' தெரிவானது மேல் கொத்மலை நீர் மின் வலுத் திட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்ட இடத்தில் தாழ்ந்தநிலப்பகுதியான ''போர்க் யோர்ட்'' தோட்டத்திற்கு நீரைத் திசை திருப்புவதாகும் இது நீர் வீழ்ச்சிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதுடன் ஆட்களை மீளக்குடியமர்த்த வேண்டிய தேவையுமிருக்காது. மேல் கொத்மலை நீர் மின் வலுத் திட்டத்தைப் போலல்லாது இப்பகுயில் நிலச் சரிவோ பூமி அதிர்ச்சியோ ஏற்படும் அபாயம் இருக்காது யோர்க்போர்ட் திட்டத்தில் தலவாக்கலை நகரம் நீரில் மூழ்கும் அபாயம் இருக்கமாட்டாதென்பதுடன் நகரை நிர்மாணிக்க வேண்டிய தேவையோ மக்களை மீளக் குடியமர்த்தும் தேவையோ இருக்கமாட்டாது இதனால் பணம் மீதப்படுத்தப்படும் இவற்றைவிட இத்திட்டத்தின் மூலம் 180MW மின் சக்தி உற்பத்தி செய்யப்படலாம்:

ஆனால் இலங்கை மின்சாரசபை இதனை ஏற்காது கூறும் காரணங்களாவன,

1. மேல் கொத்மலை நீர் மின் வலு திட்டத்தில் செலவு 260மில்லியன் என மதிப்பிடப்படுள்ளது யோர்போர்ட் திட்டத்தில் செலவு 312 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. என்றும் இதனால் மேல் கொத்மலை நீர்மின் வலுத்திட்டம் செலவு குறைந்தது என்று கூறுகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்புகளும் செல்களும் பாதிக்கப்பட்டால் பல பிரச்சினைகள் எழலாம்;

நமது உடலின் ஒவ்வொரு செல்லிற்கும் எதிரிகளை அடையாளம் காணும் திறன் உண்டு. இதனால் அவை தாளில்லாத மூலக் கூறுகள் உடலைப் பாதிப்பதைத் தடுக்க முயல்கின்றன: உதாரணமாக ஒரு காவலாளிக்கு யாரை அனுமதிக்கலாம்: யாரை அனுமதிக்கக் கூடாது. என்பது தெளிவாகத் தெரியும் போதுதான் பாதுகாப்பு சிறப்பாக இருக்கமுடியும். காவலாளியே இதனைச் சரியாகச் செயல்படுத்தாத போது என்ன பாதுகாப்பு இருக்கமுடியும்? காவலாளியே பாதிக்கப்பட்டால்... இதையொத்த நிலை தான் உடலின் நோய் எதிர்ப்பு அமைப்புப் பாதிப்புறும்போது உருவாகிறது. பாதிக்கப்பட்ட செல்கள் வெளியிலிருந்துவரும் எதிரிகளைத் தாக்கத் தவறும் போது தொற்று வியாதிகள் அசாதாரண வளர்ச்சி ஏற்பட்டு உடல் பாதிக்கப்படுகிறது: செல்களின் அசாதாரண வளர்ச்சி புற்று நோயாக முடியக்கூடும். (எய்ட்ஸ்) உள்ளவர்களின் நோய் எதிர்ப்புத் தன்மை வெகுவாகப் பாதிக்கப்படுவதால், அவர்களால் சாதாரண வியாதிகளைக் கூட தாக்குப்பிடிக்க முடிவதில்லை இதன் விளைவாக எய்ட்ஸ் நோயாளிகளை மரணத்தைக் எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ள சிறு வியாதிகள் கூடப் போதுமானவையாக உள்ளன. பாதிக்கப்பட்ட நோய் எதிர்ப்பு அமைப்பு தன்னைத் தானே தாக்கிக் கொண்டு நோய்களை உண்டாக்கும் (உ-ம் மூட்டுவாதம், ஆஸ்மா, ஒரு வகை நிரழிவு வியாதி.

பூச்சி கொல்லிகளைக் கையாளும் விவசாயிகள் அதே வயதுடைய ஒத்த உடல் நலமுடைய பிறரை விட நோய் எதிர்ப்புத் தன்மை குறைவால் ஏற்படும் நோய்களால் அதிகமாகப் பாதிக்கப்படுவதை அமெரிக்கா, கனடா, ஐரோப்பா ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் மற்றும் சீனாவில் செய்யப்பட்ட ஆய்வுகள் நிரூபிக்கின்றன. இவ்வாய்வுகள் நோய் எதிர்ப்புத் தன்மை பாதிக்கப்படுவதால் ஏற்படும் புற்றுநோய்கள் இவர்களை பிறரை விட அதிகமாகப் பாதிக்கக்கூடும் என்பதைக் காட்டுகின்றன. இவ்வாய்வுகள் சுட்டிக் காட்டுவதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள மேலும் ஆய்வுகள் தேவையாகின்றன; பல ஆய்வுகள் நோய் எதிர்ப்புத் தன்மையினைப் பூச்சி கொல்லிகள் பாதிப்பதைச் சுட்டிக் காட்டினாலும், இது குறித்த தெளிவான புரிதல் பெறுவது அவசியம்; பூச்சி கொல்லிகளின் இத்தன்மை குறித்து பூச்சிகொல்லிகளுக்கு அனுமதி தரப்படும் போது ஆய்வுகள் செய்யப்படுவதில்லை என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டோம்.

மினசோட்டா மாநிலத்தில் செய்யப்பட்ட ஆய்வுகள் பூச்சி கொல்லிகளைக் கையாளும் விவசாயிகளுக்கு விவசாயக் குடும்பங்களுக்கு பிறக்கும் போதே குறைபாடுள்ள குழந்தைகள் பிறக்க வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்று காட்டியுள்ளன. வேறு சில மாநிலங்களில் செய்யப்பட்ட ஆய்வுகளும் இதையொத்த முடிவுகளை முன் வைத்துள்ளன.

கனடாவில் இனுபிட் சமூகத்தில் செய்யப்பட்ட ஆய்வுகள் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளின் நோய் எதிர்ப்புத் திறன், புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளின் நோய் எதிர்ப்புத் திறனை விடக் குறைவாக உள்ளது என்று காட்டுகின்றன- குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பினை அளிக்கக் கூடியது. தாய்ப்பால், ஆனால் அந்தத் தாய்ப் பாலிலேயே, பூச்சி கொல்லிகள், ரசாயனப் பொருட்களின் எச்சம் மிகுதியாக உள்ளதை ஆய்வுகள் காட்டுகின்றன. இனுயிட் மக்கள் உட்கொள்ளும் மீன்கள், கடல் பிராணிகளின் உடல்களில் பெருமளவில் இவ்வெச்சங்கள் உள்ளன என்பது கண்டூறியப்பட்டுளளது. காற்று நதிகள், கடலில் கலக்கும் கழிவுகள் காரணமாக இவையும் பாதிக்கப்படுகின்றன;

இவ்வாறு பூச்சி கொல்லிகளைக் கையாளும் விவசாயி முதல் ஆர்டிக் பகுதியில் வாழும் இனுயிட்கள் வரை பல பகுதிகளில் உள்ள பல்வேறு தொழில்களை மேற்கொள்ளும் மக்களையும் பூச்சி கொல்லிகள் பாதிக்கின்றன.

**பூச்சி கொல்லிகள் என்ற பெயரில் நிரந்தரமாக நஞ்சுகளை நமது உடல்களும், சூழலும் எதற்காக ஏற்றுக் கொள்ள வேண்டும?**

வளர்ச்சியுறும் நாடுகளில் தொற்று நோய்கள் ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நோய்களே நோய்களுக்கும், மரணத்திற்கும் முக்கியக் காரணிகளாக உள்ளன. நோய் எதிர்ப்புத் தன்மை குன்றியதால், எந்த அளவிற்கு நோய்வாய்ப்படுதலும் மரணமும் அதிகரிக்கின்றன என்பது குறித்து போதுமான புள்ளி விவரங்கள், ஆய்வுகள் இல்லை. குறிப்பாக குழந்தைகள் சிறார்களின் நோய் எதிர்ப்புத் தன்மை குறைய பூச்சி கொல்லிகளும், ரசாயனங்களும் காரணமானவையா என்பதும் ஆராயப்படவேண்டும்.

ஆனால் இவ்வாய்வுகளின் முடிவுகள் வெளியாகும் வரை காத்திருக்கத் தேவையில்லை ஏனெனில் பூச்சி கொல்லிகளால் ஏற்படும் தீமைகள் குறித்து போதுமான ஆதாரங்கள் உள்ளன: முன்னெச்சரிக்கை கோட்பாட்டு அடிப்படையில் செயல்படுவது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

1. 1.3.97 அன்று மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியக் கூட்டம் மன்றுவில் நடைபெற்றது
2. அரச சார்பற்ற நிறுவனங்களின் மன்றக் கூட்டம் கிழக்கிலங்கை புனர்வாழ்வுக் கழகத்தில் 1.3.97 அன்று நடைபெற்றது
3. - 2.3.97 அன்று புன்னைச்சோலை சோலைத்தென்றல் சூழல் மன்றத்தினரின் பொதுக்கூட்டம் நடைபெற்றது
4. - கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தில் 6.3.97 அன்று பிரதேச பகுதி நாட் கூட்டம் நடை பெற்றது
5. - 15.3.97 அன்று கிழக்கிலங்கை சேதன விவசாயிகள் சங்கத்தின் கூட்டம் மன்றுவில் நடை பெற்றது இதில் சங்கத்தின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்
6. திருப்பெருந்துறை சூழல் மன்றத்தினரின் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் 20-03-97 அன்று நடைபெற்றது.
7. வாழைச்சேனை பாடசாலை சூழல் அணியினருக்கான கூட்டம் 25-3-97 அன்று மட்/வாழைச் சேனை இந்துக்கல்லூரியில் அக்கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் 7 பாட சாலைகளைச் சேர்ந்த 6 ஆசிரியர்களும் 16 மாணவர்களும் கலந்து கொண்டனர்.
8. 29-3-97 அன்று சூழல் மன்றத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் 7 சூழல் மன்றங்க ளைச் சேர்ந்த 11 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.
9. ''முகாமைத்துவ அபிவிருத்தியும், பிரச்சினை, அபாயம், மனித வளம்'' சம்பந்தமான பயிற்சிக் கருத்தரங்கு 1-3-97 முதல் 3-3-97 வரை மன்றேசாவில் நடைபெற்றது. இதில் வாகரை கோறளைப்பற்று வடக்கு அபிவிருத்தி ஒன்றியத்திலிருந்து 7 பேரும், வாழைச்சேனை தடாகம் கிராம மக்கள் நிறுவனத்திலிருந்து 12 பேரும், வந்தாறுமூலை பொதுஜன அபிவிருத்தி மன்றத் திலிருந்து 11 பேரும் கலந்து கொண்டனர்:
10. 5-3-97 அன்று வாகரை, கதிரவெளி சங்க அங்கத்தவர்களுக்கு சங்கங்களை பலப்படுத்தல் சம்பந்தமான பயிற்சி வகுப்பு நடைபெற்றது:
11. 7-3-97 முதல் 10-3-97 வரை சமூக அமைப்பாளர் பயிற்சி நெறி போரதீவுப்பற்று அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம், மஞ்சரி, கல்வி அபிவிருத்திச் சபை, செடோ, சேவ் ஆகிய அமைப்புக் களைச் சேர்ந்த 30 பேருக்கு மன்றேசாவில் நடைபெற்றது:
12. 20-3-97 அன்று கோறளைப்பற்று வடக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் உத்தியோகத்தர்கள் மத்திய குழு உறுப்பினர்களுக்கு கணக்கு முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சி வாகரையில் நடைபெற்றது.
13. 25-3-97 அன்று கோறளைப்பற்று வடக்கு அபிவிருத்தி ஒன்றிய மத்திய குழுக் கூட்டமும், நிறுவனப் பலப்படுத்தல் பற்றிய பயிற்சி நெறியும் வாகரையில் நடைபெற்றது.
14. 23-3-97 அன்று இயற்கை முறை விவசாயம் பற்றிய பயிற்சி சூழல் மன்ற அங்கத்தவர்களுக்கு தாழங்குடா விவசாயப் பண்ணையில் நடைபெற்றது.
15. 25-3-97 அன்று விவசாயத் திணைக்களத்தில் ''விவசாயமும் சூழலும்'' பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது.
16. 4-3-97 அன்று களுவங்கேணியில் பனம்பொருள் கைத்தொழில் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப் பட்டது

திரு. சண்முகம் (ஆசிரியர்)

"மன்று"
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு.

...ம் மட்டக்களப்பு நியூ சீன் அச்சகத்தில் அச்சிட்டு மன்று இணைப்பாளர்
யோ. இ. கிறிஸ்ரோபரினால் வெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org